CIN NO: L32201TN1988PLC015705

**TAMILNADU TELECOMMUNICATIONS LIMITED**
(A Joint venture of TCIL, a Govt. of India Enterprise &
TIDCO, a Govt. of Tamilnadu Enterprises)
**OPTICAL FIBRE CABLE DIVISION**

IS/ISO 9001 : 2000 Raad voor Accreditatie

Works : E18B-24, CMDA Industrial Complex, Maraimalai Nagar - 603 209. Phone : (044) 27453881, 27452406, 27451095, Telefax : +91-44-27454768

TTL/NSE/BSE/2022-23

Dt: 06.09.2022

| | |
|---|---|
| To<br>The Manager,<br>National Stock Exchange of India Limited,<br>"Exchange Plaza", Bandra Kurla Complex,<br>Bandara (East), MUMBAI – 400 051<br><br>Scrip Code: TNTELE | To<br>The Manager,<br>Bombay Stock Exchange Limited,<br>Floor No.25, PJ Towers,<br>Dalal Street, MUMBAI – 400 001<br><br>Scrip Code: 523419 |

Dear Sir/Madam,

SUB: Press Release of Intimation of Annual General Meeting (AGM) held on 28.09.2022 of Tamilnadu Telecommunications Limited (TTL)

Please find attached copy of Press Release published in English and vernacular language for intimation for announcement of Annual General Meeting of the M/s. Tamilnadu Telecommunications Limited on 05.09.2022 to be held on 28.09.2022.

We hope you will find the same in order.

Thanking You,
Yours faithfully,

(J Ramesh Kannan)
Managing Director
DIN 09292181
Encl. as above

pension funds in the country and will help offset inflation," a senior government official told ET explaining the suggestion.

the youth waiting for a longer period to get a job and there will be skill wastage," Sundar added.

# *Vifor Refuses to Give Papers to CCI, Cites Swiss Law*

**Pavan.Burugula**@timesgroup.com

**New Delhi:** European pharmaceutical firm Vifor has declined to provide certain documents sought by the Indian anti-trust regulator citing a Swiss confidentiality law, said people with direct knowledge of the matter.

- **CCI** received a confidential complaint against Vifor Pharma
- **CCI** asks Vifor to furnish certain documents
- **Queries** regarding ferric carboxymaltose (FCM)
- **Vifor** declines providing the information, citing Swiss criminal code
- **Also** cites protection rights under Patent Act

The Competition Commission of India (CCI) had asked Vifor to furnish certain documents relating to its business in India following an anonymous complaint against the company.

The company cited Section 271 of the Swiss Criminal code, which prohibits Swiss residents and entities from collecting any data or evidence from Switzerland to aid an investigation by a foreign authority.

Vifor has claimed that the information sought by the commission is stored in Switzerland and hence providing the same to CCI would mean violating the criminal code of the country, the people told ET.

**TAMILNADU TELECOMMUNICATIONS LIMITED**
Regd.Office No. 16, Aziz Mulk 3rd Street, 1st Floor, Thousand Lights, Chennai – 600 006.
CIN : L32201TN1988PLC015705

**NOTICE**

Notice is hereby given that the 34th Annual General Meeting of the Members of Tamilnadu Telecommunications Limited will be held on Wednesday the 28th September 2022 at 11.30 a.m at TCIL Bhawan, Greater Kailash – I, New Delhi-110048 through Video Conferencing ("VC") / Other Audio Visual Means ("OAVM") (the link will be available on the website of the company) to transact the business mentioned in the notice convening the said meeting which is being sent to the Members.

The e-voting period shall commence on 25th September 2022 at 9.00 a.m. and ends on 27th September 2022 at 5.00 p.m. Voting shall not be allowed beyond 5 p.m. on 27.09.2022.

The Board of Directors have appointed Mr. Himanshu Sharma, Proprietor of M/s.Himanshu Sharma and Associates, Practicing Company Secretary, having office No.1531, Wazir Nagar Kotla Mubarakpur New Delhi-110003, as scrutinizer for conducting the e-voting process in a fair and transparent manner.

Pursuant to Section 91 of the Companies Act, 2013 and Rule 10 of the Companies (Management and Administration) Rules, 2014, notice is also given that the Register of Members and Share Transfer Books will remain closed from 22nd September 2022 to 28th September 2022 (both days inclusive) for the purpose of the Annual General Meeting.

Any grievances whatsoever in relation to the e-voting process can be taken up with and shall be redressed by **Mr.J. Ramesh Kannan, Managing Director** and **Ms. Swapnil Gupta, CS** (mdpa2018ttl@gmail.com & ttlcosec@gmail.com)

The voting rights shall be reckoned on 21st September 2022, which is also the cutoff date.

By Order of the Board
Sd/-
**J. Ramesh Kannan**
Managing Director
DIN 09292181

Date : 05.09.2022
Place : Chennai

in improving employee productivity and enhancing customer journey. It has launched seven new digital assets, enabling the entire selling workforce across the value chain of pre-sales, sales & fulfillment, post-sales & seller lifecycle management, was a major milestone, in the overall digital transformation journey for the enterprise, in the year FY20-21. A mobile-first one-stop-shop enabled the sellers to complete the selling journey right from lead management to policy logging. These assets were integrated with the existing applications to offer a seamless experience for the user. The assets have been enabled with 'Single Sign On'. The digital assets are built on most modern technology stack



"Through digitalisation we are transforming all aspects of our operations and simplifying customer journey. Our focus on digital and technology is creating value to the business in terms of time to market, flexibility and ability to scale


**Pankaj Gupta**
Chief Technology Officer
Bharti AXA Life Insurance

going up by 24 points in FY22.

## LEADING WITH INNOVATION

Technology is the key enabler for this transformation. Migration to cloud and API architecture for agility and technology performance, data lake implementation for comprehensive and accurate customer, sales, operations related information, leveraging analytics for productivity and efficiency and AI for accurate and faster underwriting, early claims warning system are some of the successful technological achievements.

Specifically on cloud, the company adopted a cloud-first strategy for creating value to the business in terms of time to market, flexibility & ability to scale. Before the company started its digital transformation exercise, the legacy technology landscape consisted of monolithic applications and large infrastructure footprint with sub-



தமிழ் முரசு



சென்னையில் பல்வேறு இடங்களில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வைக்கப்பட்டிருந்த சிலைகள் நேற்று கடலில் கரைக்கப்பட்டன. பட்டினப்பாக்கத்தில் கரை ஒதுங்கியுள்ள சிலைகள்.

# குட்டையில் குதித்து காதலன் தற்கொலை கிணற்றில் குதித்து கவுன்சிலர் காதலி சாவு

## குடியாத்தம் அருகே பரிதாபம்

**குடியாத்தம், செப்.5-**

குடியாத்தம் அருகே காதலர்களுக்குள் ஏற்பட்ட தகராறு காரணமாக குட்டையில் குதித்து காதலன் தற்கொலை செய்து கொண்டார். இதனால் மனமுடைந்த கவுன்சிலர் காதலியும் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அடுத்த வாணியம்பாடியான் பட்டி பகுதியை சேர்ந்தவர் அஜீத்குமார்(26), டிப்ளமோ படித்துள்ளார். மாடுகளில் பால் கறக்கும் கூலி வேலை செய்து வந்தார். அதே பகுதியை சேர்ந்தவர் ரீட்டா(22). நெல்லூர்பேட்டை ஊராட்சி 9வது வார்டு உறுப்பினர். அஜீத்குமாரும், ரீட்டாவும் நீண்ட நாட்களாக காதலித்துள்ளனர்.

இந்நிலையில் அஜீத்குமாரும், ரீட்டாவும் நேற்று வழக்கம்போல் செல்போனில் பேசியுள்ளனர். அப்போது அவர்களிடையே திடீரென தகராறு ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் மனவேதனை அடைந்த அஜீத்குமார், வீட்டில் யாருடனும் பேசாமல் இருந்துள்ளார். நேற்று மாலை திடீரென மாயமானார். இதனால் சந்தேகம் அடைந்த அவரது பெற்றோர், தங்களது மகனை பல இடங்களில் தேடினர். எங்கு தேடியும் கிடைக்கவில்லை.



அஜீத்குமார் ரீட்டா

இதுகுறித்து குடியாத்தம் தாலுகா போலீசில் புகார் செய்தனர். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். இந்நிலையில் நேற்றிரவு சுமார் 11 மணியளவில் குடியாத்தம் அடுத்த காளியம்மன் கோயில் குட்டை அருகே அஜீத்குமாரின் பைக், செல்போன் கிடந்தது. இதனை அவ்வழியாக சென்றவர்கள் கண்டு கிராம மக்களுக்கும், தீயணைப்புதுறைக்கும் தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற தீயணைப்பு வீரர்கள் குட்டையில் இறங்கி தேடினர். சுமார் அரை மணி நேரம் தேடிய நிலையில் அஜீத்குமாரை சடலமாக மீட்டனர்.

இதையறிந்த ரீட்டா பதற்றமடைந்தார். உடனே வீட்டின் வெளியே ஓடி வந்த அவர், அங்குள்ள கிணற்றில் குதித்தார். இதைக்கண்ட அவரது பெற்றோர் மற்றும் அப்பகுதி மக்கள் அவரை மீட்க முயன்றனர். அதற்குள் அவர் இறந்துவிட்டார்.

இதுகுறித்து தகவலறிந்த குடியாத்தம் டவுன் மற்றும் தாலுகா போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காதலர்களுக்குள் ஏற்பட்ட தகராறு காரணமாக அஜீத்குமார் குட்டையில் குதித்து தற்கொலை செய்திருக்கலாம் எனவும், அஜீத்குமார் தற்கொலை செய்துகொண்டதால் ரீட்டாவும் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என போலீசார் தெரிவித்தனர். தொடர்ந்து போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஒரு கிலோ தங்கத்தை மாத்திரைகளாக்கி விழுங்கி கடத்திய வாலிபர் அதிரடி கைது

**திருவனந்தபுரம், செப்.5-**

கேரள மாநிலம் கோழிக்கோடு விமான நிலையத்தில் ஒரு கிலோ தங்கத்தை மாத்திரை போல மாற்றி விழுங்கி கடத்திய வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

கேரள மாநிலம் கோழிக்கோடு சர்வதேச விமான நிலையம் வழியாக பல்வேறு நாடுகளில் இருந்து தங்கம் கடத்துவது அதிகரித்து வருகிறது. இதைத் தடுப்பதற்காக சுங்க இலாகா, வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். இருந்த போதிலும் பல்வேறு நூதன உத்திகளைக் கையாண்டு தங்கத்தை கடத்தி வருகின்றனர்.

மேலும் விமான நிலையத்தில் பணிபுரியும் சுங்க இலாகா அதிகாரிகளும், ஊழியர்களும் பெருமளவு பணத்தை வாங்கிக் கொண்டு கடத்தலுக்கு உடந்தையாக இருப்பது தெரியவந்து உள்ளது. கடந்த மாதம் கடத்தல்காரர்களிடமிருந்து பணத்தை வாங்கிக்கொண்டு தங்கத்தை கடத்திய பொள்ளாச்சியை சேர்ந்த முனியப்பன் என்ற சுங்க இலாகா சூப்பிரண்டு கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நேற்று மாலை துபாயில் இருந்து ஏர் இந்தியா விமானம் கோழிக்கோடு வந்தது. இந்த விமானத்தில் வந்த பயணிகள் வழக்கமான பரிசோதனைகளுக்குப் பிறகு வெளியே சென்று கொண்டிருந்தனர். அப்போது வெளியே வந்த ஒரு பயணியின் நடவடிக்கையில் போலீசார் சந்தேகம் அடைந்தனர்.

உடனே அவரை புறக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில் தங்கத்தை மாத்திரைகளாக்கி விழுங்கி கடத்திக்கொண்டு வந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைதுசெய்து விசாரித்தனர். இதில் அவர் கண்ணூரை சேர்ந்த உமர் பாரூக் (26) என்பது தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து அவரை எக்ஸ்ரே பரிசோதனை செய்தபோது வயிற்றுக்குள் தங்கம் இருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் அவை வெளியே எடுக்கப்பட்டன. மொத்தம் 1.017 கிலோ தங்கத்தை மாத்திரைகளாக்கி அவர் விழுங்கி இருந்தார். விசாரணைக்குப் பிறகு அவரை போலீசார் மலப்புரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

### தண்டவாளத்தில் பாறைகள் சரிந்து விழுந்தன

# ஊட்டி மலை ரயில் ரத்து சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்

**மேட்டுப்பாளையம், செப். 5-**

கன மழையால் தண்டவாளத்தில் மண், பாறைகள் சரிந்து விழுந்ததால் ஊட்டி மலை ரயில் இன்று ரத்து செய்யப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து இன்று காலை 7.10 மணிக்கு ஊட்டிக்கு 180 பயணிகளுடன் மலை ரயில் புறப்பட்டு சென்றது. இந்நிலையில் நேற்றிரவு கல்லார் பகுதியில் பெய்த கன மழை காரணமாக கல்லார்-ஹில்குரோவ் ரயில் நிலையங்களுக்கு இடையே மலை ரயில் பாதையில் மண் மற்றும் பாறைகள் சரிந்து விழுந்தது. இதனால் மேட்டுப்பாளையத்தில் இருந்து சென்ற ஊட்டி மலை ரயில் மேற்கொண்டு செல்ல முடியாமல் மீண்டும் மேட்டுப்பாளையம் திரும்பியது.



கன மழை காரணமாக மேட்டுப்பாளையம் அடுத்த கல்லார்-ஹில்குரோவ்ரயில் நிலையங்களுக்கு இடையே தண்டவாளத்தில் மண் மற்றும்பாறைகள் சரிந்துவிழுந்தது. இதனால் ஊட்டி மலை ரயில் இன்று ரத்து செய்யப்பட்டது.

இதனால் ஊட்டி மலை ரயில் போக்குவரத்து இன்று ரத்து செய்யப்படுவதாக சேலம் ரயில்வே கோட்ட சார்பில் அறிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து ரயிலில் பயணம் செய்த 180 பயணிகளுக்கும் பயண சீட்டுக்கான கட்டணம் திருப்பி அளிக்கப்பட்டது. மலை ரயிலில் பயணிக்கலாம் என ஆசையில் சென்ற சுற்றுலா பயணிகள் இதனால் ஏமாற்றம் அடைந்தனர்.

### சென்னை விமானநிலையத்தில்

# உள்நாட்டு விமான சேவைகள் அதிகரிப்பு

**மீனம்பாக்கம், செப். 5-**

சென்னை விமான நிலையத்தில் இருந்து பெங்களூர், மும்பை, கொச்சி, மைசூர் ஆகிய நகரங்களுக்கு இம்மாதத்தில் புதிதாக கூடுதல் விமான சேவைகள் துவங்குகின்றன. இதனால் சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் விமானங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் பயணிகள் உற்சாகம் தெரிவித்தனர்.

மகாராஷ்டிர மாநில தலைநகர் மும்பையை தலைமையிடமாக கொண்டு இயங்கும் ஒரு விமான நிறுவனம், மும்பை, அகமதாபாத் ஆகிய இடங்களுக்கு புதிய விமான சேவைகளை இயக்கி வருகிறது. அந்நிறுவனம் தற்போது சென்னையை மையமாக வைத்து, அதிக உள்நாட்டு விமான சேவைகளை இயக்க முடிவு செய்துள்ளது. இதைத் தொடர்ந்து, இம்மாதம் 10ம் தேதி முதல் நாள்தோறும் பெங்களூரில் இருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு, சென்னை உள்நாட்டு விமானநிலையத்துக்கு காலை 9.35 மணியளவில் வந்துசேரும் வகையில் விமான சேவையை தொடங்குகிறது.

பின்னர் அதே விமானம் மீண்டும் காலை 10.15 மணிக்கு சென்னையில் புறப்பட்டு, காலை 11.20 மணிக்கு பெங்களூர் சென்றடைகிறது. இதையடுத்து மதியம் 12 மணிக்கு பெங்களூரில் புறப்பட்டு, பிற்பகல் 1.05 மணிக்கு சென்னை வந்து சேருகிறது. பின்னர் பிற்பகல் 1.20 மணிக்கு சென்னையில் புறப்பட்டு, பிற்பகல் 2.35 மணிக்கு பெங்களூர் சென்றடைகிறது. இந்த விமானம் வரும் 10ம் தேதி முதல் தினசரி சேவையாக இயக்கப்படுகிறது. சென்னையில் இருந்து பெங்களூருக்கு ஏற்கெனவே நாள்தோறும் 18 விமானங்கள் இயக்கப்படுகின்றன. இது இனி 22 விமான சேவைகளாக அதிகரிக்கும்.



இதேபோல் இம்மாதம் 15ம் தேதி முதல் மாலை 6.10 மணிக்கு மும்பையில் புறப்படும் விமானம், இரவு 7.55 மணியளவில் சென்னை வந்து சேரும். அதன்பின், அதே விமானம் மீண்டும் இரவு 8.50 மணிக்கு புறப்பட்டு, இரவு 10.45 மணியளவில் மும்பை சென்று சேரும். இதுவரை சென்னை-மும்பை இடையே மொத்தம் 38 விமான சேவைகள் உள்ளன. இனி அவை 40 சேவைகளாக அதிகரிக்கும்.

மேலும், இம்மாதம் 26ம் தேதியில் இருந்து புதிதாக சென்னையில் இருந்து கொச்சிக்கும் கொச்சியில் இருந்து சென்னைக்கும் தினசரி விமானங்களை இயக்குகிறது. சென்னையில் மாலை 5 மணிக்கு புறப்பட்டு, மாலை 6 மணிக்கு கொச்சி சென்று சேரும். கொச்சியில் மாலை 6.15 மணிக்கு புறப்பட்டு, இரவு 7.15 மணியளவில் சென்னை வந்து சேரும். சென்னை-கொச்சி இடையே இதுவரை மொத்தம் 8 விமான சேவைகள் உள்ளன. இனி அது 10 விமான சேவையாக அதிகரிக்கிறது.

அதோடு, தற்போது சென்னையில் இருந்து மைசூருக்கு தனியார் பயணிகள் விமானம் மட்டுமே ஒருமுறை இயங்கி வருகிறது. தற்போது மைசூர் சென்று வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால், மேலும் ஒரு விமான நிறுவனம் புதிதாக சென்னை- மைசூர்- சென்னை இடையே வாரத்தில் ஞாயிறு, புதன் மற்றும் வெள்ளி ஆகிய 3 நாட்களுக்கு புதிய விமான சேவைகளை துவக்குகிறது. சென்னையில் காலை 9.25 மணிக்கு புறப்பட்டு, காலை 11 மணியளவில் மைசூர் சென்று சேருகிறது. பின்பு மைசூரில் இருந்து காலை 11.30 மணிக்கு புறப்பட்டு, மதியம் ஒரு மணிக்கு சென்னைக்கு வருகிறது.

இந்த விமானம் ஏடிஆர் எனும் சிறிய ரக விமானம். இதில் 74 பயணிகள் வரை பயணிக்கலாம். இந்த விமானத்தில் சலுகை கட்டணமாக ஒரு வழி பயணத்துக்கு ₹4,678 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதைத் தொடர்ந்து, சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் விமான சேவைகள் அதிகரிப்பு பயணிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

### கந்து வட்டி தகராறு

# பாஜ பெண் நிர்வாகிகள் அடிதடி

## திருப்பூர் அருகே பரபரப்பு

**திருப்பூர், செப். 5-**

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே வடுகபாளையம் புதூர் ஸ்ரீநகர் பகுதியை சேர்ந்த லதா மலர் (37). இவர், பல்லடம் நகர பாஜ தலைவியாக உள்ளார். இவருக்கு 12ம் வகுப்பு படிக்கும் மகனும், பத்தாம் வகுப்பு படிக்கும் ஒரு மகளும் உள்ளனர்.

லதா மலர், பல்லடம் பொன்காளியம்மன் கோயில் அருகே தள்ளுவண்டி கடையில் போண்டா, வடை, சுட்டு வியாபாரம் செய்து வருகிறார். இந்நிலையில், குடும்ப சூழ்நிலை காரணமாக சில மாதங்களுக்கு முன்பு பல்லடம் பனப்பாளையத்தை சேர்ந்த கல்பனா-முத்துக்குமார் தம்பதியிடம் இருந்து லதா மலர், ரூ.20 ஆயிரம் கந்து வட்டிக்கு வாங்கியுள்ளார்.

அதன்பின், ரூ.2 ஆயிரம் வீதம் சில வாரம் திருப்பி கொடுத்து வந்தார். இதுபோல், லதா மலர் மாணிக்காபுரம் ரோட்டில் வாடகை வீட்டை காலி செய்துவிட்டு கிடைத்த ரூ.12 ஆயிரத்தையும் கொடுத்துள்ளார். இந்நிலையில், கடந்த 30ம் தேதி வட்டிக்கு பணம் கொடுத்த கல்பனா, லதா மலரிடம் சென்று சில ஆவணங்களில் கையெழுத்து பெற்று சென்றதாகவும், பின்னர் பாக்கித் தொகை ரூ.8 ஆயிரம் மற்றும் அதற்கு வட்டியாக மொத்தம் ரூ.30 ஆயிரம் இன்னும் கடன் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதனை கேட்டு லதா மலர் அதிர்ச்சி அடைந்தார். இந்நிலையில் கடந்த 2ம் தேதி பல்லடம் கல்லம்பாளையத்தை சேர்ந்த மங்கலம் சாலையில் கவரிங் நகை கடை வைத்து நடத்தி வரும் வேலுமணி மற்றும் அவரது மனைவி பாஜ மாவட்ட செயற்குழு உறுப்பினரான ரேவதி ஆகியோர் லதா மலரை தொடர்பு கொண்டு, கல்பனாவிடம் வாங்கிய கடன் தொகையை பற்றி பேச வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

இதையடுத்து லதா மலர், தனது மகளுடன் பல்லடம் மங்கலம் சாலையில் உள்ள ரேவதி வேலுமணியின் கவரிங் நகை கடைக்கு சென்றுள்ளார். அப்போது அந்தக் கடையில் ஏற்கனவே வந்திருந்த கல்பனாவும், ரேவதியும் சேர்ந்து லதா மலரை ஆபாச வார்த்தைகளால் திட்டி பணம் கேட்டு மிரட்டி உள்ளனர். அதனை அவரது மகள் எதிர்த்து கேள்வி கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கல்பனாவும், ரேவதியும் அச்சிறுமியை சரமாரியாக தாக்கி உள்ளனர். அதனை தடுக்க முயன்ற, லதா மலரையும் தாக்கியதாக கூறப்படுகிறது.

இதையடுத்து அங்கிருந்து தப்பி வந்த தாயும், மகளும் இதுகுறித்து பல்லடம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். இதன் பேரில் போலீசார் பாஜ மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரேவதி மற்றும் கல்பனா ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கிராமங்களுக்குள் புகுந்து

# கத்தியால் குத்தி 10 பேர் கொலை

## கனடாவில் பயங்கரம்

**ஒட்டாவா, செப். 5-**

கனடாவின் சஸ்காட்சுவான் மாகாணத்திற்கு உட்பட்ட ஜேம்ஸ் ஸ்மித் க்ரீ நேஷன் மற்றும் வெல்டன் பகுதியில் புகுந்த கும்பல் கிராம மக்களை கத்தியால் சரமாரியாக குத்தியது. இந்த கத்திக்குத்து தாக்குதலில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாகவும், 15 பேர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் அந்த மாகாணம் முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து போலீஸ் அதிகாரி ரோண்டா பிளாக்மோர் கூறுகையில், 'கத்திக் குத்து தாக்குதல் சம்பவமானது 13 இடங்களில் நடந்தது. இதுவரை 10 பேர் கொல்லப்பட்டனர். குறைந்தது 15 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் டேமியன் சாண்டர்சன் மற்றும் மைல்ஸ் சாண்டர்சன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் ரெஜினாவின் ஆர்செல்லா அவென்யூ பகுதியில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளுக்குள் மற்றவர்களை அனுமதிக்க கூடாது என்றும், எச்சரிக்கையுடன் இருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கத்திக் குத்து சம்பவத்தின் பின்னணி குறித்து விசாரிக்கப்படுகிறது' என்றார்.

செப்டம்பர் 5, 2022 திங்கட்கிழமை

# மிகவேக வளர்ச்சி!

'இந்தியா வரும் 2030ம் ஆண்டில், உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை பிடிக்கும்' என நிபுணர்கள் கணித்துள்ளனர். ஐ.எம்.எப்., எனப்படும் சர்வதேச நிதியத்தின் தரவுகள், டாலருக்கு எதிரான பணத்தின் மதிப்பு ஆகியவற்றை கணக்கிட்டு, உலக நாடுகளின் பொருளாதார நிலையை வரிசைப்படுத்தி, 'புளூம்பெர்க்' நிறுவனம் பட்டியல் வெளியிட்டது.

அதில், கடந்த ஏப்.-ஜூன் காலாண்டு கணக்கின்படி, உலகின் மிகப் பெரிய பொருளாதாரமாக இந்தியா முன்னேறி உள்ளது. அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அடுத்த இடத்தை இந்தியா பிடித்துள்ளது. இதன் வாயிலாக பிரிட்டன் ஆறாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. இதே பட்டியலில், கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் இந்தியா 11வது இடத்தில் இருந்தது; பிரிட்டன் ஐந்தாவது இடத்தில் இருந்தது.

இது குறித்து, வளரும் நாடுகளுக்கான ஆராய்ச்சி மற்றும் தகவல் அமைப்பின் இயக்குனர் ஜெனரல் சச்சின் சதுர்வேதி கூறியதாவது:பிரிட்டனை நாம் முந்துவது முதல் முறை அல்ல. கடந்த 2019ல் கூட பிரிட்டனை பின்னுக்கு தள்ளி, நாம் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறினோம். நாம் மூலதனச் செலவில் கவனம் செலுத்துகிறோம். வருவாய் செலவினங்களை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். பணவீக்கத்தை இலக்காகக் கொண்ட ரிசர்வ் வங்கியின் பொருளாதார திட்டங்கள் மிகவும் சீரான முறையில் வளர்ச்சியடைய உதவியது. அதன் முடிவுகள் பலன் அளிக்க துவங்கிஉள்ளன. இவ்வாறு அவர் கூறினார். ''இந்திய பொருளாதாரம் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்து வருகிறது. வரும் 2028-30ம் ஆண்டில், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக நாம் உயர்வோம்'' என நம் நாட்டின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் அரவிந்த் விர்மானி தெரிவித்தார்.

மூத்த பொருளாதார நிபுணர் சரண் சிங் கூறுகையில்,'இந்தியாவுக்கு இது மிகப் பெருமையான தருணம். வளர்ச்சி மற்றும் பொருளாதாரத்தில் நாம் மிகச் சிறப்பான நிலையில் உள்ளோம். உலக அளவில் மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா உள்ளது என்பதை, சர்வதேச நிதியம் பல ஆண்டுகளாகவே கணித்து வருகிறது. பணவீக்கம் கட்டுக்குள் உள்ளது. உலகமே பொருளாதார நெருக்கடியில் உள்ள வேளையில், இந்திய பொருளாதாரம் மட்டும் வளர்ச்சி அடைந்து வருகிறது' என்றார்.

இதனிடையே, இந்திய காப்பீடு துறை வளர்ச்சி அடைந்து வருவதும், அடுத்த 10 ஆண்டுகளில் இந்திய காப்பீடு சந்தை, உலகின் ஆறாவது பெரிய சந்தையாக உருவாகும் வாய்ப்பு இருப்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்திய காப்பீடு துறை மொத்த பிரிமியம் அளவில் ஆண்டுக்கு 14 சதவீத வளர்ச்சி அடையும் வாய்ப்பு இருப்பதாகவும், 2032ம் ஆண்டில் ஆறாவது பெரிய சந்தையாக விளங்கும் என்றும் ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு மொத்த பிரிமியம் அளவில் இந்தியா, உலகின் 10வது பெரிய சந்தையாக இருந்தது. ஆயுள் காப்பீடு துறையை பொறுத்தவரை, இந்த ஆண்டு 6.6 சதவீத வளர்ச்சி அடையும் என்றும், அடுத்த ஆண்டு 7.1 சதவீத வளர்ச்சி உண்டாகும் என்றும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது.



தி. நகர் பேருந்து நிலையம் அருகே நடை மேம்பால படிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### நாவடக்கம் தேவை

# அரசியல் முதிர்ச்சியற்ற அண்ணாமலை

## பாலகிருஷ்ணன் தாக்கு

**திருவாரூர், செப். 5-**

இந்தியா உலகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது என பாஜக கதை விடுகிறது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன் கூறினார்.



இது குறித்து திருவாரூரில் அவர் அளித்த பேட்டி:

பிரிட்டனை தாண்டி 5வது வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா மாறப்போகிறது என்று ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்தியா ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் பின்னடைவை சந்தித்து வருகிறது. ஒரு நாடு வளர்கிறது என்றால் ஏற்றுமதி அதிகரிக்க வேண்டும். அந்நிய செலாவணி மிச்சமாக வேண்டும். இந்தியா உலகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது என பாஜக கதை விடுகிறது. இந்தியா ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் பின்னடைவை சந்தித்து வருகிறது என்பதே உண்மையாகும்.

மோடி என்பது ஒருவழி பாதை. அவர் பேசுவது மட்டுமே உலகம் கேட்க வேண்டும். மற்றவர்கள் பேசுவதை அவர் கேட்கமாட்டார்.

இலவசங்களை குறைத்து கார்ப்பரேட்டுகளை கொழிக்க வைக்கும் ஒன்றிய அரசு, சாதாரண மக்களுக்கு எதுவும் தரக்கூடாது என்கிறது. இதுகுறித்து கேட்டால் அண்ணாமலைக்கு கோபம் வருகிறது. அரசியல் முதிர்ச்சி இல்லாமல் தமிழக நிதியமைச்சரை விமர்சிப்பது அநாகரிகம். அண்ணாமலைக்கு நாவடக்கம் தேவை. நாட்டு மக்களுக்கு இலவசங்கள் தேவைப்படுகிறது. இந்த திட்டங்கள் பறிபோனால் பட்டினி சாவு நிலை ஏற்படும். பட்டினி சாவுகளை தடுக்க இலவசங்கள் தேவையென வலியுறுத்தும் தமிழக நிதியமைச்சருக்கு எனது பாராட்டுகளை தெரிவிக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.


**TTL**

**தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : எண். 16, அஜிஸ் முல்க் 3-வது தெரு, முதல் தளம், ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006.

CIN : L32201TN1988PLC015705

**அறிவிப்பு**

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் பற்றி பரிசீலிப்பதற்காக தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் கம்பெனியின் 34-வது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் 28.09.2022 புதன்கிழமையன்று காலை 11.30 மணியளவில் TCIL பவன், கிரேட்டர் கைலாஷ் - 1, புது டெல்லி - 110048 என்ற முகவரியில் காணொலி காட்சி ( VC) மற்றும் பிற ஆடியோ காட்சி முறை ( OAVM ) மூலம் ( இவை கம்பெனியின் இணையதளத்தில் உள்ளது) நடைபெறும் என்பதை இதன் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மின்னணுவியல் வாக்குப்பதிவு 25.09.2022 அன்று காலை 9.00 மணிக்கு துவங்குகிறது. 27.09.2022 அன்று மாலை 05.00 மணிக்கு முடிவடைகிறது. 27.09.2022 அன்று மாலை 05.00 மணிக்குப் பிறகு வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது.

மின்னணுவியல் வாக்குப்பதிவை நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடத்துவதற்காக கம்பெனிகள் செயலாளர் பயிற்சி பெற்ற திரு. ஹூமான்சு சர்மா, உரிமையாளர் M/s. ஹூமான்சு சர்மா & அசோசியேட்ஸ், எண். 1531, வசீர் நகர், கோட்லா முபாரக்பூர், புது டெல்லி - 110003 என்பவரை ஆய்வாளராக கம்பெனியின் இயக்குனர்கள் குழுவானது நியமித்துள்ளது.

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தை முன்னிட்டு கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேடும், பங்குமாற்று புத்தகங்களும் 22.09.2022 முதல் 28.09.2022 வரை (இந்த இரு தினங்கள் உட்பட) மூடப்பட்டிருக்கும் என்பது 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 91-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) 10-வது பிரிவின் கீழும் இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது. மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் முறையீடுகள் இருப்பின், அவைகள் திரு. J. ரமேஷ் கண்ணன், நிர்வாக இயக்குனர் மற்றும் Ms. ஸ்வப்னில் குப்தா, கம்பெனி செயலாளர் (mdpa2018ttl@gmail.com & ttlcosec@gmail.com) அவர்களால் தீர்த்து வைக்கப்படும். கட்-ஆப் தேதியான 21.09.2022 அன்றுள்ளபடி வாக்குரிமைகள் கணக்கிடப்படும்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஒப்பம்/-
J. ரமேஷ் கண்ணன்
நிர்வாக இயக்குனர்.
DIN 09292181

தேதி : 05-09-2022
இடம் : சென்னை


Printed and published by **R.M.R. Ramesh** on behalf of Kal Publications Private Limited and printed at Dinakaran Press , Plot No.170. No.10, First Main Road, Nehru Nagar, Perungudi, Chennai - 600 096 and Published at 229, Kutchery Road, Mylapore, Chennai - 600 004. Ph.4220 9191. Fax: 4220 9200/01
Editor: **R.M.R. Ramesh**. RNI Regn. No. 24428/1973

# TAMILNADU TELECOMMUNICATIONS LIMITED

Regd.Office.No. 16, Aziz Mulk 3rd Street, 1st Floor, Thousand Lights, Chennai – 600 006.

**CIN : L32201TN1988PLC015705**

## NOTICE

Notice is hereby given that the 34th Annual General Meeting of the Members of Tamilnadu Telecommunications Limited will be held on Wednesday the 28th September 2022 at 11.30 a.m at TCIL Bhawan, Greater Kailash – I, New Delhi-110048 through Video Conferencing ("VC") / Other Audio Visual Means ("OAVM") (the link will be available on the website of the company) to transact the business mentioned in the notice convening the said meeting which is being sent to the Members.

The e-voting period shall commence on 25th September 2022 at 9.00 a.m. and ends on 27th September 2022 at 5.00 p.m. Voting shall not be allowed beyond 5 p.m. on 27.09.2022.

The Board of Directors have appointed Mr. Himanshu Sharma, Proprietor of M/s.Himanshu Sharma and Associates, Practicing Company Secretary, having office No.1531, Wazir Nagar Kotla Mubarakpur New Delhi-110003, as scrutinizer for conducting the e-voting process in a fair and transparent manner.

Pursuant to Section 91 of the Companies Act, 2013 and Rule 10 of the Companies (Management and Administration) Rules, 2014, notice is also given that the Register of Members and Share Transfer Books will remain closed from 22nd September 2022 to 28th September 2022 (both days inclusive) for the purpose of the Annual General Meeting.

Any grievances whatsoever in relation to the e-voting process can be taken up with and shall be redressed by **Mr.J. Ramesh Kannan, Managing Director** and **Ms. Swapnil Gupta, CS** (mdpa2018ttl@gmail.com & ttlcosec@gmail.com)

The voting rights shall be reckoned on 21st September 2022, which is also the cutoff date.

By Order of the Board
Sd/-
**J. Ramesh Kannan**
Managing Director
DIN 09292181

Date : 05.09.2022
Place : Chennai

# தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண். 16, அஜிஸ் முல்க் 3-வது தெரு, முதல் தளம், ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006.

**CIN : L32201TN1988PLC015705**

## அறிவிப்பு

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் பற்றி பரிசீலிப்பதற்காக தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் கம்பெனியின் 34-வது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் 28.09.2022 புதன்கிழமையன்று காலை 11.30 மணியளவில் TCIL பவன், கிரேட்டர் கைலாஷ் - 1, புது டெல்லி - 110048 என்ற முகவரியில் காணொலி காட்சி ( VC) மற்றும் பிற ஆடியோ காட்சி முறை ( OAVM ) மூலம் ( இவை கம்பெனியின் இணையதளத்தில் உள்ளது) நடைபெறும் என்பதை இதன் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மின்னணுவியல் வாக்குப்பதிவு 25.09.2022 அன்று காலை 9.00 மணிக்கு துவங்குகிறது. 27.09.2022 அன்று மாலை 05.00 மணிக்கு முடிவடைகிறது. 27.09.2022 அன்று மாலை 05.00 மணிக்குப் பிறகு வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது.

மின்னணுவியல் வாக்குப்பதிவை நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடத்துவதற்காக கம்பெனிகள் செயலாளர் பயிற்சி பெற்ற திரு. ஹுமான்சு சர்மா, உரிமையாளர் M/s. ஹுமான்சு சர்மா & அசோசியேட்ஸ், எண். 1531, வசீர் நகர், கோட்லா முபாரக்பூர், புது டெல்லி - 110003 என்பவரை ஆய்வாளராக கம்பெனியின் இயக்குனர்கள் குழுவானது நியமித்துள்ளது.

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தை முன்னிட்டு கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேடும், பங்குமாற்று புத்தகங்களும் 22.09.2022 முதல் 28.09.2022 வரை (இந்த இரு தினங்கள் உட்பட) மூடப்பட்டிருக்கும் என்பது 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 91-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) 10-வது பிரிவின் கீழும் இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது. மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் முறையீடுகள் இருப்பின், அவைகள் திரு. J. ரமேஷ் கண்ணன், நிர்வாக இயக்குனர் மற்றும் Ms. ஸ்வப்னில் குப்தா, கம்பெனி செயலாளர் (mdpa2018ttl@gmail.com & ttlcosec@gmail.com) அவர்களால் தீர்த்து வைக்கப்படும். கட்-ஆப் தேதியான 21.09.2022 அன்றுள்ளபடி வாக்குரிமைகள் கணக்கிடப்படும்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஒப்பம்/-
**J. ரமேஷ் கண்ணன்**
நிர்வாக இயக்குனர்.
DIN 09292181

தேதி : 05-09-2022
இடம் : சென்னை